# கொழும்புப் பல்கலைக்கழகம்

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I – 2018

## உரோமானியச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**ஐந்து** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. 'ஜஸ்டீனியனின் சட்டத்துறையில் செய்த பிரதான சாதனையானது புதுமைப்படுத்துதல் என்பதை விட ஒன்று சேர்த்தல் ஆகும்.'

   நீர் உடன்படுகின்றீரா? ஜஸ்டீனியனின் சட்ட ஒன்றுதிரட்டல்களுடன் தொடர்புறுத்தி உமது விடைக்குக் காரணங்கள் தருக.

2. லுக்ரீஷியா என்பவள் அல்பஸ் என்பவனை மானுஸ் அல்லாத (*Sine Manu*) மூலம் திருமணம் செய்திருந்ததுடன் அவர்களுக்கு அன்டோனியஸ் என்கின்ற ஒரு மகனும் இருந்தான். அன்டோனியஸ்க்கு பத்து வயது நடக்கும் போது காய்ச்சால் காரணமாக அல்பஸ் இறந்தான். இரண்டு வருடங்களின் பின்னர் லுக்ரீஷியா சுதந்திரமானவனான பல்பஸ் என்பவனை மானுஸ் முறையில் (*cum manu)* திருமணம் செய்ததுடன் அவர்களுக்கு புருட்டஸ் என்கின்ற மகனும் குளோடியா என்கின்ற மகளும் இருந்தனர். லுக்ரீஷியா மற்றும் பல்பஸ் ஆகியோர் வெற்றிகரமாக வெதுப்பகம் ஒன்றினையும் திராட்சை இரச கடை ஒன்றினையும் நடாத்தினர். பல்பஸ் வேறு பல கடைகளை சொந்தம் கொண்டிருந்ததுடன் அவற்றை வேறு நபர்களுக்கு வாடகைக்கும் வழங்கியிருந்தான். அன்டோனியஸ்சும் அவர்களுடன் வாழ்ந்து வந்தான். பல்பஸ் மரணமடையும் போது புருட்டஸ் பதினேழு வயதானவன் என்பதோடு குளோடியா பதினாறு வயதானவளாக இருந்தனர். பல்பஸ் இறந்து மூன்று மாதங்களிற்குள் தனது அனைத்து ஆண் முன்னோர்களும் இறந்துவிட்டனர் என்பதனை லுக்ரீஷியா அறிந்துக்கொண்டாள். லுக்ரீஷியாவும் அவளது பிள்ளைகளும் உணவகம் ஒன்றினை நடாத்தத் தீர்மானித்தனர். குளோடியா தற்பொழுது மானுஸ் முறை இன்றித் (*Sine Manu*) திருமணம் செய்யத் திட்டமிடுகின்றாள்.

லுக்ரீஷியா மற்றும் அவளது பிள்ளைகளது குடும்ப அந்தஸ்த்து மற்றும் ஆதனங்களை சொந்தங்கொள்ள உள்ள தகைமை தொடர்பில் கருத்துரைக. உமது விடையினை சட்ட கோட்பாடுகளினால் ஆதாரப்படுத்துக.

3. டிரஜன் என்பவன் ஓர் செல்வந்த வியாபாரியாவதுடன் பிரசித்தி பெற்ற ஓவியனும் கவிஞனுமாவான். அவனது நண்பனான போலக்ஸ் என்பவனின் தோட்டத்தில் விடுமுறையைக் கழிக்கும் போது ஏடு ஒன்றில் கவிதை எழுதியதுடன் பலகை ஒன்றில் ஓவியமொன்றினை வரைந்தான். அவ் ஏடு மற்றும் பலகை ஆகியன போலக்ஸிற்குச் சொந்தமானவை. உரோமிற்கு திரும்பும் போது டிரஜன் அவ்ஏட்டினையும் பலகையினையும் தன்னுடன் எடுத்து வந்தான். டிரஜன் இல்லாத நேரத்தில் அவனது மகனான ஜுலியஸ் லூசியஸ் என்பவனின் திராட்சை இரசம் மற்றும் கோதுமை முதலியனவற்றையும் fலிக்ஸ் என்பவனின் திராட்சை இரசம் மற்றும் கோதுமை என்பனவற்றையும் டிரஜனின் களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்துவதற்காக பெற்றுக்கொண்டான். ஜுலியஸ் 'திராட்சை இரசம் திராட்சை இரசம் தான் என்றும் கோதுமை கோதுமை தான் என்று'' கூறி இரு தொகுதி திராட்சை இரசங்களையும் ஒரு பெரிய பீப்பாயிலும் இரு தொகுதி கோதுமை மாவுப் பொதிகளையும் ஒரு பெரிய குவியலிலும் போட்டான். டிரஜனின் மூன்று ஏக்கர் ஆப்பிள் தோட்டத்தின் பயனுறுதியாளனான மாக்கஸ் என்பவன் பழங்களை பறித்துக்கொள்ள முன்னர் மரணமடைந்தான். அந்நியன் ஒருவானான ரேமஸ் என்பவன் ஆப்பிள் தோட்டத்திற்குள் வந்து ஒரு ஏக்கர் தோட்டத்திலுள்ள பழங்களைப் பறித்துக்கொண்டான். மாக்கசின் வாரிசான சபினஸ் என்பவன் டிரஜனிடம் தான் ஆப்பிள்களை அறுவடை செய்வதற்கும் ரேமஸ் எடுத்து சென்ற பழங்களை மீட்டுக் கொள்ளவும் அடுத்த வாரம் வருவதாக அறிவித்தான். போலக்ஸ் ஏடு மற்றும் பலகையை கேட்டு டிரஜனுக்குக் கடிதம் எழுதினான்.

மேற்கூறிய சந்தர்ப்பத்தில் டிரஜனின் சட்ட நிலைமை தொடர்பில் ஏற்புடையதான சட்ட கோட்பாடுகள் மற்றும் காரணங்கள் கூறி ஆலோசனை வழங்குக.

4. (அ) 'வாடகை என்பது கொள்வனவு மற்றும் விற்பனையை ஒத்திருப்பதுடன் ஒரே சட்ட விதியினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.'

மேற்கூறிய கருத்தின் வலிதுடைமையை எடுத்துக்காட்டுகளுடன் பரீட்சிக்க.

(ஆ) X என்பவன் ஒரு மாதத்திற்கு சிங்கங்களை அடக்குவதற்குப் பயிற்றுவிப்பாளராகப் பாவிப்பதற்காக பத்து அடிமைகளை Y என்பவனிடம் கையளித்தான். Y பொழுதுபோக்கிற்காக பகிரங்க நிகழ்ச்சிகளை நடாத்துகின்ற சர்க்கஸ் ஒன்றின் உரிமையாளன் ஆவான். குறிப்பிட்ட காலத்தின் முடிவில் ஒவ்வொரு காயப்படாத அடிமைக்கும் 150 சொலிடிகளையும், பயிற்றுவிக்கும் பணிகளின் போது மரணமடைகின்ற அல்லது காயமடைகின்ற ஒவ்வொரு அடிமைக்கும் 1500 சொலிடிகளையும் வழங்க Y இணங்கினான். Y ஐந்து அடிமைகளுக்கு ஆபத்தான அகழ்வு வேலைகளை வழங்கியதுடன் அவர்களுக்கு அத்தகைய வேலைகளில் விசேட திறமையோ தேர்ச்சியோ இல்லை என்பதனை அறிந்தும் இருந்தான். அகழ்வுப் பணிகளின் போது ஐந்து அடிமைகளும் காயமடைந்தனர். சிங்கங்களைப் பயிற்றுவிக்க முற்படும் போது மூன்று அடிமைகள் மரணமடைந்தனர். மிகுதி இரு அடிமைகளும் பாதுகாப்பாகவும் காயம் எதுவும் இன்றி X இடம் உரிய நாளன்று மீள வழங்கப்பட்டனர்.

மேற்கூறிய சந்தர்ப்பத்தில் எழுகின்ற சட்டப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு திறத்தவர்களுக்கு அவரவரது சட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

5. (அ) கபீடோ என்பவன் உரோமானிய செனட்டரான செம்புரோனியஸ் மற்றும் அவரது மனைவியான கல்பூர்னியா ஆகியோரை திரையரங்கின் வாயிலில் அருகில் அணுகி அவளை ஒழுக்கமற்ற பெண் என அழைத்தான். செம்புரோனியஸ், 'அதனால் உனது பெறுமதியற்ற தந்தைக்கு அவமதிப்பைக் காட்டுகின்றேன்' எனக் கத்தியவாறு கபீடோவின் முகத்தில் தாக்கினான். சண்டையின் போது கபீடோவின் இடது கண் கடுமையாகக் காயப்பட்டதுடன். கபீடோவின் காயப்பட்ட கண்ணுக்கு மருத்துவர் தவறான மருந்தொன்றினை செலுத்தியதன் விளைவாக, கபீடோ அக்கண் பார்வையை இழந்தான். கபீடோ 'மூன்று சகோதரர்கள்' என்கின்ற உரோமில் மிக வரவேற்புள்ள பொப் குழுவின் பிரதான பாடகனாவான்.

திறத்தவர்களுக்கு அவரது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

(ஆ) கொடூரமான ஊறு (*atrox injuria)* என்ற கருத்தேற்பு மேற்கூறப்பட்ட நிகழ்வுகளுடன் ஏதேனும் வகையில் தொடர்புபடுமா என விளக்குக.

6. (அ) மாக்கஸ் என்பவனுக்கு சீயுஸ் மற்றும் ஓலுஸ் என்கின்ற இரண்டு மகன்கள் அவனது அதிகாரத்தின் கீழ் இருந்ததுடன் சீனோ என்கின்ற மகனுக்கு விடுதலையளித்துமிருந்தான். தன் மரணபடுக்கையில் இருக்கும் போது மாக்கஸ் இறுதி விருப்பாவணமொன்றை எழுதியிருந்ததுடன் அதில் அவன் 'நான் மரணித்ததிலிருந்து ஒரு வருடத்தினுள் டிரீபோனியஸின் மகளாகிய போஷியாவை திருமணம் செய்தால் சீயுஸ் எனது வாரிசாகட்டும். சீயுஸ் போஷியாவை எனது மரணத்திற்கு பின்னர் குறிப்பட்ட காலத்தினுள் திருமணம் செய்யாவிட்டால் ஓலுஸ் எனது வாரிசாகட்டும் எனக் குறிப்பிட்டிருந்தான்.' மாக்கஸ் மரணமடைந்ததுடன் அவனது மரணத்திலிருந்து இரண்டு மாதங்களிற்குள் சீயுஸ் போஷியாவைத் திருமணம் செய்தும் கொண்டான்.

மாக்கஸின் இறுதிவிருப்பாவணத்தின் வலிதுடைமையை ஆராய்க. சீயுஸ் போஷியாவை திருமணம் செய்யாதிருந்திருந்தால் உமது விடை வேறுப்படுமா? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) (i) எத்தகைய சந்தர்ப்பங்களில் கடமை பிறழ்ந்த இறுதிவிருப்பாவணத்திற்கு (*querella inofficiosi testament*) எதிராக வழக்கு கொண்டு வரலாம்?

(ii) அவ்வழக்கின் சட்ட விளைவுகளை விளக்குக.

7. (அ) 'அடிமை ஒருவனுக்கு சட்டப்படி உரிமைகளோ கடமைகளோ இல்லை'

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கு ஆதரவாக காரணங்கள் மற்றும் சட்டக் கோட்பாடுளை வழங்குக.

(ஆ) கஸ்கா என்பவன் இரண்டு கிழமைகளுக்கு விடுமுறையில் சென்றிருந்தான். அவன் புறப்பட்ட உடனே அவனது அடிமையான பெட்ரஸ் என்பவன் கஸ்காவின் திராட்சை இரசத்தினைக் குடிப்பதற்கு ஐந்து மணித்தியாலங்கள் செலவழித்தான். பின்னர் பெட்ரஸ் கஸ்காவின் சிறந்த ஆடையொன்றினை அணிந்துக்கொண்டு கஸ்கசின் மொட்டைமாடியில் நின்று கொண்டு அரசியல்வாதிகள் பற்றி கடுமையான பாடல்களை பாடியதுடன் கீழே கடந்து சென்ற மக்கள் மீது கழிவு நீரையும் வீசினான். கஸ்கசின் அயல்வீட்டுக்காரனான பொலஸ் அக்கடுமையான பாடல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தபோது பெட்ரஸ் அவன் மீது இரண்டு வாளி கழிவு நீரை வீசினான். பொலஸின் சிறந்த மேலங்கியில் மோசமாக கறை படிந்ததுடன் அதனது நிறமும் மங்கிப் போனது. மாலையில் பெட்ரஸ் நீண்ட சிறகொன்றினால் வீதியில் கடந்து சென்றவர்கள் மீது தடவிச் சென்றான். பெஸ்டஸ் என்பவன் அவ்விதம் தடவப்படுவதிலிருந்து தவிர்ப்பதற்காக மறுபுறம் பாய்ந்தான். அவன்

சறுக்கி விழுந்து தனது காலை உடைத்துக் கொண்டான். வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் பெஸ்டஸ் தன் பொய்ப் பல்லினை இழந்தான்.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில் கஸ்கா மற்றும் பெட்ரஸ் ஆகியோரின் பொறுப்புடைமைகளை பொருத்தமான சட்டக் கோட்பாடுகளுடன் தொடர்புறுத்தி மதிப்பிடுக.